**தென்னைக்கு நடுவே... தித்திக்கும் தீவனப்பயிர்!**



கால்நடை வளர்ப்பில் பசுந்தீவனம் உற்பத்தி மிக அத்தியாவசியமானது. பால் உற்பத்தியைப் பெருக்கும் தீவனப்பயிரான நாட்டுச் சோளத்தை தென்னையில் ஊடுபயிராக சாகுபடி செய்து வருகிறார், திருப்பூர் மாவட்டம், நந்தவனப்பாளையம், பெரியத் தோட்டம் பகுதியைச் சேர்ந்த பழனிசாமி. கனமழை தந்து போன சொதசொதப்பையும் மீறி வரப்பில் நின்று கொண்டு தோட்டத்தைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த பழனிசாமியைச் சந்தித்தோம்.

கடந்த 20 வருடங்களுக்கு முன்பு வரைக்கும் அவர் பகுதியில், விவசாய நிலத்தைவிட, மேய்ச்சல் நிலங்கள் அதிகமாக இருந்தது. பம்ப்செட் மோட்டார் வந்த பிறகு, மேய்ச்சல் நிலங்கள், படிப்படியாக விளைநிலங்களாக மாறிவிட்டது. மேய்ச்சல் நிலம் குறைந்ததால், அதில் மானாவாரியாக மழைக் காலங்களில் விதைத்துவிட்டு வந்த சோளம், கம்பு, கொள்ளு மாதிரியான தீவனப்பயிர் சாகுபடியும் குறைந்து, கால்நடைகளும் குறைந்துவிட்டது.

இந்த நிலையில் ஆள் பற்றாக்குறை, கட்டுபடியாகாத விலையென்று பல பிரச்சனைகளால் இவர் தென்னை விவசாயத்துக்கு மாறிவிட்டார். நான்கு ஏக்கரில் 280 தென்னை மரங்களை நட்டு, நான்கு வருடமாகிறது. போன வருடம் வரைக்கும் இளம் தென்னைக்குள்ளே வெங்காயம், மிளகாய், மக்காச்சோளம் என்று ஊடுபயிர் சாகுபடி செய்துகொண்டிருந்தார்.

நான்கு கறவை மாடுகளை கொண்டு பால் உற்பத்தி செய்கிறார். என்னதான் பருத்திக்கொட்டை, புண்ணாக்கு, கலப்புத் தீவனம் கொடுத்தாலும், பசுந்தீவனம் கொடுத்தால்தான் பால் அளவு கூடும். அதுவும் கோடை காலத்தில் பசுந்தீவனம் கொடுக்காவிட்டால் பால் குறைந்துவிடும். அதனால் மாட்டுக்கு தேவையான தீவனத்துக்காக நாட்டுச்சோளத்தை தென்னைக்கு ஊடுபயிராக

விதைத்திருக்கிறார். தென்னைக்கு இடையில் நாட்டுசோளம் சாகுபடி செய்யும் முறை பற்றி விளக்கினார்.

நாட்டுச்சோளத்தை தனிப்பயிராகவும் விதைக்கலாம், மற்ற பயிர்களுக்கு இடையில் ஊடுபயிராகவும் விதைக்கலாம். ஒரு ஏக்கருக்கு பத்து மாட்டுவண்டி தொழுவுரத்தைக் கொட்டி இறைத்து, உழவு செய்ய வேண்டும். விறகு, ஒரு ஏக்கருக்கு 20 கிலோ விதைச் சோளத்தை கைகளால் வீசி விதைத்துவிட வேண்டும். மீண்டும் ஒரு உழவு செய்ய வேண்டும். இரண்டு அல்லது மூன்று தண்ணீர் கொடுத்தால் போதும்… பயிர் வளர்ந்து விடும். நாட்டுச்சோளத்தைப் பொறுத்தவரை உழுது, விதைப்பதைத் தவிர வேறு எந்த வேலைபாடும் தேவைப்படுவதில்லை… அடுத்து அறுவடைதான்.

சோளத்தின் வயது90 நாட்கள்.வடிகால் வசதி உள்ள அனைத்து மண்ணிலும் வளரும். இதற்குத் தனியாக எந்தப் பட்டமும் இல்லை. விதைத்த 70 நாட்களில் கதிர்களில் பால் பிடிக்கும். பசுந்தீவனமாக கொடுக்க நினைப்பவர்கள், இந்த நிலையிலேயே தட்டைகளை அறுத்து துண்டுகளாக வெட்டி மாடுகளுக்குக் கொடுக்கலாம். 90 முதல் 100 நாட்களுக்குள் மீதமுள்ள தட்டைகளில் உள்ள முதிர்ந்த சோளக்கதிர்களை அறுவடை செய்துகொண்டு, தட்டையை அடியோடு அறுத்து, சின்னச்சின்ன கட்டுகளாகக் கட்ட வேண்டும். பிறகு, இந்த கட்டுகளை நிலத்தில் கூம்பு போல நட்டு வைத்து, ஒரு மாதம் வரை நன்றாக வெயிலில் காய வைக்க வேண்டும். ஒரே இடத்தில் சோள தட்டைகள் மண்ணில் ஊன்றி நின்றால், கரையான் பிடித்துவிடும் வாய்ப்பு உண்டு. எனவே, அடிக்கடி கட்டுகளைத் தட்டி உலர்த்தி இடம் மாற்றி வைக்க வேண்டும்.

அறுவடை செய்த சோளக் கதிர்களைக் காய வைத்து குச்சியால் அடித்து மணியைப் பிரித்துக்கொள்ள வேண்டும். ஏக்கருக்கு சுமார் 300 கிலோ சோளம் கிடைக்கும். தீவன சோளமாக இருப்பதால், தரமும் மகசூலும் குறைவாகவே இருக்கும். இதை மூட்டை பிடித்து வைத்துக்கொண்டு, மாவாக அரைத்து காய்ச்சி, கறவை மாடுகளுக்கு தண்ணீரில் கலந்து கொடுக்கலாம். நாமும் தோசை பலகாரம் என சமைத்து சாப்பிடலாம். தட்டை நன்றாக காய்ந்த பிறகு, நமக்கு வசதியான இடத்தில் கல், மரங்கள் கொண்டு 2 அடி உயரம், 15 அடி நீளம், 7 அடி

அகலம் கொண்ட பட்டறை(போர்) அமைத்துக் கொள்ள வேண்டும். அதன் மீது சோளத் தட்டைக் கட்டுகளை இரண்டாக வெட்டி, ஒரே சீராக அடுக்கிக் கொள்ள வேண்டும்.

காய்ந்த சோளத் தட்டைகளை இப்படி போர் போட்டு வைத்துக் கொண்டால, மழைக்காலங்கள், தீவனப்பற்றாக்குறை ஏற்படும் வறட்சிக் காலங்கள் போன்ற சமயங்களில் மாடுகளுக்குத் தீவனமாக கொடுக்கலாம்.

சாகுபடி தொழில்நுட்பம் சொல்லி முடித்த பழனிசாமி, “ ஏக்கருக்கு மூன்று டிராக்டர் அளவுக்கு தீவனம் கிடைக்கும். மேய்ச்சல் நிலம் இல்லையென்று யாரும் கால்நடை வளர்ப்பை கைவிட வேண்டிய தேவையில்லை. இளம் தென்னையாக இருந்தால் சோளம், வளர்ந்த தென்னையாக இருந்தால் தீவனப்புல் இதையெல்லாம் ஊடுபியராக போட்டு, பால் உற்பத்தியைப் பெருக்கலாம் என்கிறார் நம்பிக்கையோடு.

**தொடர்புக்கு:**

பழனிச்சாமி 95004-93989

மோகன் 94432-58626